# ரோக்மா இலவச அஞ்சல்வழி வேதாகமக் கல்வி

*தபால் பெட்டி எண் - 9, No.8, பாரதியார் 2 வது தெரு, S.S. காலனி மதுரை – 10. Ph. 0452 – 4354302*

## வருங்காலம்

(மகா உபத்திரவ காலம், கர்த்தருடைய நாள், அர்மகெதோன் யுத்தம்)

### முன்னுரை :

சபை எடுத்துக் கொள்ளப்படுவதைக் குறித்து வேதம் என்ன போதிக்கிறது என்பதைத் தெளிவாக 9–வது பாடத்தில் பார்த்துள்ளோம். இதை மனதில் கொள்ளவேண்டும். சபை இந்த நாளில் எடுத்துக்கொள்ளப்படும் என்று திட்டவட்டமாக ஒரு நாளை நிர்ணயிக்க முடியாது. சபை எந்தநேரத்திலும் எடுத்துக்கொள்ளப்படலாம் என்ற எதிர்பார்ப்போடு நாம் வாழுகிறோம். சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிற்பாடு, தானியேலின் 70–வது வாரம் ஆரம்பமாகும். இதற்கு உபத்திரவக்காலம் என்று பெயர். இக்காலத்தின் தொடக்கத்தில் அந்திக்கிறிஸ்து தோன்றி தன் ஆட்சியைத் தொடங்குவான். உபத்திரவக்காலத்தின் கடைசியில் அர்மகெதோன் யுத்தம் நடைபெறும். கிறிஸ்து மறுபடியும் மகிமை நிறைந்தவராக இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு நடக்கக் கூடிய அனைத்துக் காரியங்களையும் கிரமமாக வரிசைப்படுத்தி நீங்கள் தெளிவாக அறிந்துகொள்ளும் வகையில் உங்களுக்கு முன் வைப்பதே இப்பாடத்தின் முக்கிய நோக்கமாகும். நிகழக்கூடிய ஒவ்வொரு காரியங்களையும் வெவ்வேறான பாடங்களாக விவரிக்கலாம். இருப்பினும், நீங்கள் தெளிவாக அறிந்துகொள்ளும் வகையில் அவசியமான தகவல்களை சுருக்கமாகக் கொடுப்பதே எங்களது நோக்கமாகும்.

### இப்பாடத்தின் முக்கியத்துவம் :

எந்த ஒரு மனிதன் தூரத்திலுள்ளவைகளைப் பார்க்கிறாரோ, அவர் ஒரு சிறப்பான வாழ்க்கை வாழமுடியும் என எப்பொழுதும் நாம் நம்புகிறோம். தீர்க்கதரிசனங்களை நாம் தெளிவாக அறிந்துகொள்ளும் போது, நிகழ்காரியங்களை நாம் இன்னும் தெளிவாக அறிந்துகொள்ள முடியும். தீர்க்கதரிசன வார்த்தையினாலே நாம் பாதுகாக்கப்பட ஒரு நிலையான விசுவாசம் வேண்டும். இந்த உலகம் அழிந்துகொண்டிருக்கும் பொழுது தீர்க்கதரிசனங்களில் உள்ள விசுவாசமானது நாம் நிற்கக்கூடிய ஒரு கற்பாறையாகவும், நங்கூரத்தைப் போன்றும் இருந்து இந்த உலகம் அறிந்துகொள்ளாத சமாதானத்தையும், எதிர்பார்க்காத சந்தோஷத்தையும் நமக்குக் கொடுக்கும். தீர்க்கதரிசன வார்த்தையின் உண்மையை மறுதலித்து, அதை ஒரு பொருட்டாக எண்ணாமல் அநேகர் இருக்கின்றனர். ஆனால் வேதாகமத்தில் பெரும்பாலான பகுதி தீர்க்கதரிசனங்களால் நிறைந்திருக்கிறது என்பதை மனதில் கொள்ளவேண்டும். ஜனங்கள் எச்சரிக்கப்படவேண்டும். வருங்காலத்தில் நிகழக்கூடிய காரியங்களின் நிச்சயமான அறிவைக்கொண்டு நாம் உண்மையோடு வருங்கோபத்திற்குத் தப்பித்துக் கொள்ளுங்கள் என்று அவிசுவாசிகளை எச்சரிக்க வேண்டும்.

### I. கர்த்தருடைய நாள் :

**அ. கவனமுள்ள வேதாகம மாணவர்கள் கர்த்தருடைய நாளுக்கும், கிறிஸ்துவின் நாளுக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்தவர்களாக இருப்பார்கள்.**

1. கிறிஸ்துவின் நாள், சபை எடுத்துக்கொள்ளப்படுவதையும், கிறிஸ்துவின் நியாயாசனத்தையும் தொடர்பு படுத்துகிறது (பிலிப்பியர் 1:5,11; 1 கொரிந்தியர் 1:7, 8; 3:13; 2 கொரிந்தியர் 1:14; 2 தீமோத்தேயு 1:18; 4:8).
2. கர்த்தருடைய நாள், சபை எடுத்துக்கொள்ளப்படும் நாளிலிருந்து புதிய வானம், புதிய பூமி உருவாகும் நாள் வரைக்கும் உள்ள அனைத்துச் சம்பவங்களையும் உட்படுத்துவதாயிருக்கிறது. 2 தெசலோனிக்கேயர் 2:2; 2 பேதுரு 3:10; யோவேல் 1:15; சகரியா14:1–4 இந்த வசனங்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் (பூமிக்கு வருவதையும்) ஆயிரவருட அரசாட்சியையும் உள்ளடக்குகிறது (வெளி. 21:1).

**ஆ. 2 தெசலோனிக்கேயர் 2:2–ல் உள்ள ‘கிறிஸ்துவின் நாள்’ என்ற பதமானது ‘கர்த்தருடைய நாள்’ என்று வாசிக்கப்பட வேண்டும்.**

1. தெசலோனிக்கேயா பட்டணத்தில் வசித்து வந்த விசுவாசிகள் வான மேகத்தில் கர்த்தரண்டை எடுத்துக் கொள்ளப்படுவார்கள் என்றும், கைவிடப்படுவதில்லை என்றும், கர்த்தருடைய நாளில் நடைபெறவிருக்கும்

பயங்கரத்துக்கு ஆளாக மாட்டார்கள் என்றும் உறுதிப்படுத்தும்படியாகவே 2–வது தெசலோனிக்கேயரின் புத்தகம் எழுதப்பட்டது (2 தெசலோனிக்கேயர் 2:1–8).

2. கர்த்தருயை நாள் வருவதற்கு முன்பு 2 காரியங்கள் நடக்க வேண்டுமென்று (வசனம் 3) வெளிப்படுத்துகிறது.

   i) சபை எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

   ii) கேட்டின் மகனாகிய பாவமனுஷன் வெளிப்பட வேண்டும்.

**இ. கர்த்தருடைய நாள் பழைய ஏற்பாட்டின் வார்த்தையாகும்**

1. இந்த வார்த்தை பழைய ஏற்பாட்டில் ஏறத்தாழ 75 முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.
2. பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் சபை எடுத்துக்கொள்ளப்படுவதைக் காணவில்லை. ஆனால் உபத்திரவக் காலத்தையும், அந்திக்கிறிஸ்துவையும், கிறிஸ்து மகிமை நிறைந்தவராக உலகில் வருவதையும், ஆயிரவருட அரசாட்சியையும் கண்டார்கள்.
3. யோவேல் 1:15–ல் ‘‘அது சங்காரம் போல சர்வவல்லவரிடத்திலிருந்து வருகிறது’’ என்று கர்த்தருடைய நாளைக் குறித்து யோவேல் குறிப்பிடுகிறார்.

**ஈ. கர்த்தருடைய நாள் என்பது தேவன்தாமே நேரடியாக மனிதனுடைய, தேசங்களுடைய காரியங்களில் ஈடுபடும் நேரத்தைக் குறிக்கிறது.**

சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிற்பாடு கர்த்தருடைய நாள் ஆரம்பமாகும் (1 கொரிந்தியர் 1:8; பிலிப்பியர் 1;5). தேவனுடைய நாள் (2 பேதுரு 3:12). வெள்ளைசிங்காசன நியாயத்தீர்ப்பு (அவிசுவாசிகளுக்கு மட்டும்). புதிய வானம், புதிய பூமி உருவாக்கப்படுதல்.

## II. அந்திக்கிறிஸ்து :

சபை எடுத்துக்கொள்ளப்படும் நாள் வரைக்கும் கேட்டின் மகனாகிய பாவ மனுஷன் வெளிப்படமாட்டான் (2 தெசலோனிக்கேயர் 2:1–3). பரிசுத்தஆவியானவர் நடுவிலிருந்து நீக்கப்படும் முன்னே அது வெளிப்படாது. நீக்கப்படும்போது அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான் (2 தெசலோனிக்கேயர் 2:6–8). விசுவாசிகள் கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்க வேண்டுமேயல்லாமல் அந்திக்கிறிஸ்துவின் வருகையை அல்ல.

**அ.** வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள ‘மிருகம்’ அல்லது ‘அந்திக்கிறிஸ்து’வினால் நடக்கவிருக்கிற ஒரே உலக அரசாங்கத்திற்கு, இன்றைய உலகம் அரசியலிலும், மொழியிலும், சமுதாயத்திலும், எண்ணிக்கையிலும், பணத்திலும் விரைவாக ஆயத்தமாகிக் கொண்டே இருக்கிறது.

**ஆ. அந்திக்கிறிஸ்து இருக்கிறான் என்பதற்கான உண்மை :**

பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் அவனுக்குக் கொடுக்கப்பட்ட பல்வேறு பெயர்களைக் கொண்டு உறுதிப்படுத்தலாம்.

**1. பழைய ஏற்பாட்டில் :**

   i) வரப்போகிற பிரபு (தானியேல் 9:26).

   ii) அருவருப்பான செட்டைகளோடே பாழாக்குகிறவன் வந்து இறங்குவான் (தானியேல் 9:27).

   iii) சின்ன கொம்பு (தானியேல் 7:8).

   iv) மூர்க்க முகமும், சூதான பேச்சுமுள்ள சாமர்த்தியமான ஒரு ராஜா (தானியேல் 8:23).

   v) தனக்கு இஷ்டமானபடி செய்யும் ராஜா (தானியேல் 11:36).

   vi) அசீரியா ராஜா (ஏசாயா 10:5–12); பாபிலோனிய ராஜா (ஏசாயா 14:2); அபத்தமான மேய்ப்பன் (சகரியா 11:16, 17).

**2. புதிய ஏற்பாட்டில் :**

   i) பாவ மனுஷன் (2 தெசலோனிக்கேயர் 2:3).

   ii) கேட்டின் மகன் (2 தெசலோனிக்கேயர் 2:3).

   iii) அக்கிரமக்காரன் (2 தெசலோனிக்கேயர் 2:8).

iv) பாழாக்குகிற அருவருப்பானவன் (மத்தேயு 24:15).

v) அந்திக்கிறிஸ்து (1 யோவான் 2:18, 22).

vi) மிருகம் (வெளி. 13:1).

**இ. அந்திக்கிறிஸ்து வெளிப்படுவது எப்பொழுது :**

1. கடைசிக்காலத்தில் எழும்புவான் (தானியேல் 8:23).
2. பழைய ரோமப்பேரரசு மறுபடியும் உயிர்ப்பிக்கப்படும்பொழுது அவன் எழும்புவான் (தானியேல் 7:7,8; வெளி. 13:1,2).
3. தானியேலின் 70–வது வாரத்தொடக்கத்தில் அந்திக்கிறிஸ்து எழும்புவான். ஆரம்பத்தில் இஸ்ரவேலின் நண்பனாகக் காணப்படுவான் (தானியேல் 9:27).
4. சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிற்பாடு அவன் எழும்புவான் (2 தெசலோனிக்கேயர் 2:1–3). தடைசெய்கிறவர் நீக்கப்படும்பொழுது அவன் வெளிப்படுவான் (2 தெசலோனிக்கேயர் 2:6–8).

**ஈ. அந்திக்கிறிஸ்து எங்கிருந்து வருவான்?**

1. ஒரு தேசத்திலிருந்து எழும்பி வருவான். அவன் ஒரு புறஜாதியாக இருப்பான் என பலர் நினைக்கின்றனர் (தானியேல் 7:8, 24, 25).
2. ஒருவேளை இவன் சீரியா தேசத்திலிருந்து எழும்புகிறவனாகவும், ரோமப்பேரரசின் குடிமகனாகவும் இருக்கலாம் என நம்பப்படுகிறது (தானியேல் 11:38). யூதர்களை வெறுத்து அவர்களுடைய பரிசுத்த ஸ்தலத்தை நாசமாக்கின சீரியா ராஜாவாகிய அந்தியோகிரஸ் எபிப்பென்ஸ்ப் போல இவன் காணப்படுவான்.

**உ. அந்திக்கிறிஸ்துவின் இயல்புகளையும், ஆள்தன்மையையும் குறித்து நாம் தெரிந்துகொள்வது என்ன?**

1. மக்கள் எதிர்பார்க்கும் ஓர் பூரண மனிதனாகக் காணப்படுவான்.
2. இவன் பெருமை நிறைந்தவனாகக் காணப்படுவான். மேலும் தன்னை எல்லாருக்கும் மேலாக உயர்த்துகிறவனாய்க் காணப்படுவான் (தானியேல் 11:38).
3. இவன் எதிர்த்து நிற்கிறவனாயும், தன்னைத்தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:4). எல்லாத் தேவர்களுக்கும் மேலாக தன்னை உயர்த்துகிறவனாய்க் காணப்படுவான் (தானியேல் 11:36–39).
4. பெருமையானவைகளைப் பேசும் வாயும் அவனுக்கு இருந்தது (தானியேல் 7:8). அவன் தன் உபாயத்தினால் வஞ்சகத்தைக் கைகூடி வரப்பண்ணி, தன் இருதயத்தில் பெருமைகொண்டு அநேகரை அழிப்பான் (தானியேல் 8:25; 2 தெசலோனிக்கேயர் 2:9,10).
5. இவன் பொய்யனாகவும், வஞ்சகனாகவும் இருப்பான். "அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும், அடையாளங்களோடும், பொய்யான அற்புதங்களோடும், கெட்டுப் போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும்" (2 தெசலோனிக்கேயர் 2:9,10).

<u>**குறிப்பு :**</u>

புது இயக்கங்களின் மூலமாகவும், பொய்யான மதத்தலைவர்களின் மூலமாகவும் இலட்சக்கணக்கான மக்கள் இன்றைக்கும் எப்படி இலகுவாக ஏமாற்றப்படுகின்றனர் என்பதைக் காண்கிறோம்.

6. இவன் சாத்தானிடத்திலிருந்து வல்லமையைப் பெறக்கூடியவனாகவும், அவனாலே கட்டுப்படுத்தப்படக் கூடியவனாகவும் இருப்பான் (2 தெசலோனிக்கேயர் 2:9). "அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் இருக்கும்." அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரத்தை வலுசர்ப்பம் (சாத்தான்) கொடுத்தது (வெளி. 13:4). எனவே, இவன் கபடு நிறைந்தவனாகவும், வஞ்சிக்கிறவனாகவும், தந்திரமானவனாகவும், ஏமாற்றக்கூடியவனாகவும், சாத்தானின் வல்லமையை உடையவனாகவும் காணப்படுவான்.

**ஊ. அந்திக்கிறிஸ்துவினுடைய வல்லமையின் எல்லை அல்லது வரம்பு என்ன?**

1. காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற அவனுக்கு வல்லமை உண்டு (தானியேல் 7:25).

2. உலக பொருளாதார நிலையை முழுவதுமாகக் கட்டுப்படுத்த அவனுக்கு வல்லமை உண்டு (வெளி. 13:16,17).
3. மத சம்பந்தமான காரியங்களைக் கட்டுப்படுத்த அவனுக்கு வல்லமை உண்டு (வெளி. 13). தன்னை உயர்த்தி, எந்த தேவனிலும் தன்னைப் பெரியவனாக்கி, தேவனுடைய ஆலயத்தில் தேவன்போல உட்கார்ந்து தன்னைத் தான் தேவனென்று காண்பிக்கிறவனாயும் இருப்பான் (தானியேல் 11:36; 2 தெசலோனிக்கேயர் 2:4).
4. 'மகா வேசி' என்று அழைக்கப்படுகிற விழுந்துபோன மோசமான மத முறைமையிலிருந்து இவன் அதிகாரத்தைப் பெறுவான். இந்த மத முறைமை இவனை ஆளுகை செய்ய முயற்சி செய்யும்பொழுது அந்திக் கிறிஸ்து இந்த மதமுறைமையை அழித்துப்போடுவான் (வெளி. 17:3,16,17).
5. இவனுடைய வல்லமை குறிப்பாக கிறிஸ்துவையும், இஸ்ரவேல் ஜனங்களையும் எதிர்த்து நிற்கக்கூடியதாய் இருக்கும். (வெளி. 12:4–6; 12–14; 13:7; தானியேல் 7:21, 25; 8:24).

**ஏ. அந்திக்கிறிஸ்துவின் வீழ்ச்சி, அழிவு, போகவேண்டிய இடம் :**

1. இவனுடைய கட்டுப்படுத்தும் சாத்தானின் செயல் உபத்திரவக்காலத்தின் கடைசி $3\frac{1}{2}$ ஆண்டுகள் மட்டுமே இருக்கும் (வெளி. 13:5).
2. உபத்திரவக்காலத்தின் கடைசியில் அந்திக்கிறிஸ்துவின் இராணுவம் எருசலேமை முற்றிகைபோடும் (சகரியா 14:2).
3. கிறிஸ்து மறுபடியும் வந்து அர்மகெதோன் என்னும் இடத்தில் அவனோடு யுத்தம் செய்து அந்திக் கிறிஸ்துவையும், அவனுடைய வல்லமையையும் அழித்துப்போடுவார் (வெளி. 16:13–16; 19:15–19; 2 தெசலோனிக்கேயர் 2:8).
4. மிருகம் பிடிக்கப்பட்டு எரிகிற அக்கினிக்கடலிலே உயிரோடே தள்ளப்பட்டான் (வெளி. 19:20).

## III. வரக்கூடிய உபத்திரவக்காலமும், தானியேலின் 70–வது வாரமும் :

இவ்வுலகில் நமக்கு உபத்திரவம் உண்டு என்று ஆண்டவர் சொல்லியிருக்கிறார் (யோவான் 16:33). சபை அநேக உபத்திரவங்களை கடந்து வந்திருக்கிறது. இவ்விதமான உபத்திரவங்களை சபை சந்தித்திருக்கிறபடியினால் இனி உபத்திரவக் காலம் என்று ஒன்றும் இல்லை என அநேகர் நம்புகின்றனர். மேலும் வேதத்தில் கூறப்பட்ட உபத்திரவக்காலத்தை மறுதலிக்கின்றனர். ஏற்கனவே நடைபெற்ற உபத்திரவத்தை இனி வரக்கூடிய உபத்திரவக் காலத்தோடு ஒப்பிட்டுச் சொல்ல முடியாது. அது மிக பயங்கரமானதாக இருக்கும் (தானியேல் 12:1; எரேமியா 30:7; மத்தேயு 24:15–21, 29; வெளி. 7:14).

**அ. உபத்திரவக்காலம் எப்பொழுது ஆரம்பமாகும்?**

1. சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிற்பாடு, பரிசுத்த ஆவியானவர் இவ்வுலகத்திலிருந்து நீக்கப்படும் பொழுது, உபத்திரவக்காலம் ஆரம்பமாகும் (2 தெசலோனிக்கேயர் 2:1–8).
2. கிறிஸ்து மகிமை நிறைந்தவராய் மறுபடியும் இவ்வுலகத்திற்கு வருவதற்கு முன்பு உபத்திரவக்காலம் ஆரம்பமாகும் (மத்தேயு 24:29, 30).
3. தானியேலின் 70–வது வாரத்தின் தொடக்கத்தில் உபத்திரவக்காலம் ஆரம்பமாகும் (தானியேல் 9:27). தானியேல் 9:20–27 வசனங்களை வாசித்துப் பார்க்கவும்.
   i) வருடத்தை வாரம் என்று அழைப்பது பொதுவான வழக்கம் (ஆதியாகமம் 29:27, 28, 30).
   ii) தானியேலின் 69–வது வாரத்திற்கும் 70–வது வாரத்திற்கும் இடைவெளி இருக்கிறது. 69–வது வாரத்தில் மேசியா சங்கரிக்கப்பட்டார். ஆனால் இன்னும் 70–வது வாரம் ஆரம்பமாகவில்லை.
   iii) அந்திக்கிறிஸ்துவுக்கும், இஸ்ரவேலுக்கும் இடையே ஒரு ஒப்பந்தத்துடன் இந்த 70–வது வாரம் ஆரம்பமாகும். இது ஏழு ஆண்டுகளாகும். முதல் $3\frac{1}{2}$ ஆண்டுகள் கடந்தவுடன் இந்த ஒப்பந்தம் அந்திக்கிறிஸ்துவினால் முறிக்கப்படும். கடைசி $3\frac{1}{2}$ ஆண்டுகள் மகா உபத்திரவக்காலம் என்று அழைக்கப்படுகிறது. இது எதிர்காலத்தில் நிகழக்கூடிய ஒரு சம்பவமாகக் காணப்படுகிறது (மத்தேயு 24:15).

**ஆ. உபத்திரவக்காலத்தின் பிரதான இயல்புகள் என்ன?**

1. இது தேவனுடைய கோபாக்கினை பூமியில் கொட்டப்படக்கூடிய ஒரு காலமாகும்.
   i) இஸ்ரவேல் ஜனங்களுக்கு விரோதமாக சாத்தானின் கோபம் (வெளி. 12:9, 12, 13; 13:7).
   ii) ஆட்டுக்குட்டியானவரின் கோபம் (வெளி. 6:16, 17).

iii) மிருகத்தையும், அதன் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது, தன் கையிலாவது அதன் முத்திரையைத் தரித்துக்கொண்டவர்களுக்கு விரோதமாக தேவனுடைய கோபாக்கினை (வெளி. 14:9–11; 15:7; 16:1–12; லூக்கா 21:23).

2. இஸ்ரவேலுக்கும் மற்ற தேசங்களுக்கும் வரும் நியாயத்தீர்ப்பின் நாளாகும் (எசேக்கியேல் 20:37, 38; வெளி. 3:10; 14:7; 16:1; மத்தேயு 25:31–46).
3. மிருகத்திற்கும், கள்ளத்தீர்க்கதரிசிக்கும் ஒரு பயங்கரமான நேரமாகும் (வெளி. 13:1–10 (5,6,7); வெளி. 13:11–18 (14,16,17).
4. பிசாசுகளின் செயல்பாடுகள் எங்கும் நிறைந்து காணப்படுகிற காலமாகும் (வெளி. 16: 13, 14).
5. மனித இனத்திற்கு எண்ணிலடங்காத வேதனையும், அழிவையும் தரக்கூடிய காலமாகும்.

i) நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதைச் சூரியன்மேல் ஊற்றினான். தீயினால் மனுஷரைத் தகிக்கும்படி அதற்கு அதிகாரங் கொடுக்கப்பட்டது. அப்பொழுது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினாலே தகிக்கப்பட்டார்கள் (வெளி. 16:8–10).

ii) மனித இனத்தில் மூன்றில் ஒரு பகுதியினர் அழிந்தனர் (வெளி. 9:18).

iii) மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான். உடனே அவைகள் இரத்தமாயின (வெளி. 16:4). அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக் கண்டேன். இதோ பூமி மிகவும் அதிர்ந்தது. சூரியன் கறுப்புக் கம்பளியைப் போல கறுத்தது. சந்திரன் இரத்தம் போலாயிற்று (வெளி. 6:12).

iv) அதினால், மரங்களில் மூன்றிலொரு பங்கு வெந்து போயிற்று. பசும் புல்லெல்லாம் எரிந்து போயிற்று (வெளி. 8:7). அதினால் சமுத்திரத்தில் மூன்றிலொரு பங்கு இரத்தமாயிற்று (வெளி. 8:8; 16:3).

**இ. உபத்திரவக்காலம் வருவதின் பெரிய நோக்கங்கள் என்ன?**

1. இஸ்ரவேல் ஜனங்களை பரிசுத்தப்படுத்தி, மேசியாவின் வருகைக்கு இவர்களை ஆயத்தப்படுத்த இந்த உபத்திரவக்காலம் அனுமதிக்கப்படுகிறது (எசேக்கியேல் 20:37, 38; எரேமியா 30:7). யாக்கோபின் இக்கட்டுக் காலம் என்று அழைக்கப்படுகிறது.
2. கிறிஸ்துவை நிராகரித்து, மிருகத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளும் புறஜாதிகளைத் தண்டிக்க இந்த உபத்திரவக்காலம் அனுமதிக்கப்படுகிறது (வெளி. 16:2; சகரியா 14:3; மீகா 5:15).
3. புறஜாதிகளுக்கு ஒரு முடிவைக் கொண்டுவரும் பொருட்டு இந்த உபத்திரவக்காலம் அனுமதிக்கப்படுகிறது (லூக்கா 21:24; அப்போஸ்தலர் 15:14–16).

**ஈ. உபத்திரவக்காலம் எதுவரைக்கும் நீடித்திருக்கும் (அல்லது) இதனுடைய கால வரையறை என்ன?**

1. தானியேலின் 70–வது வாரம் நிச்சயமாக 7 ஆண்டுகள் மட்டுமே. அந்திக்கிறிஸ்துவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையே ஒரு ஒப்பந்தத்துடன் இது ஆரம்பமாகிறது. உபத்திரவகாலம் 7 ஆண்டுகள் மட்டும்.
2. கடைசி $3\frac{1}{2}$ ஆண்டுகள் அதாவது தானியேலின் 70–வது வாரத்தின் பாதியில் இப்பூமியில் மகா உபத்திரவக் காலம் வரும்.

i) முதல் $3\frac{1}{2}$ ஆண்டுகள் கழிந்த பிற்பாடு அந்திக்கிறிஸ்து தன்னுடைய ஒப்பந்தத்தை முறித்து, எருசலேமில் உள்ள தேவாலயத்தை பாழாக்கி தன்னை தேவனாக அங்கே நிறுத்துவான். தானியேல் 9:27; 11:37; மத்தேயு 24:15–22; 2 தெசலோனிக்கேயர் 2:4).

ii) கடைசி $3\frac{1}{2}$ ஆண்டுகள் அதாவது மகா உபத்திரவக்காலம் கீழ்க்கண்ட மூன்று நிலைகளில் சொல்லப்பட்டிருக்கிறது.

1. ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் (தானியேல் 12:7; வெளி. 12:14).
2. நாற்பத்திரண்டு மாதங்கள் (வெளி. 11:2; 13:5).
3. ஆயிரத்திருநூற்றறுபது நாள் (1260 நாள்) (வெளி. 12:6).

iii) கிறிஸ்து மகிமை நிறைந்தவராக பூமிக்கு வரும் வருகையோடும், அர்மகெதோன் யுத்தத்தோடும் இந்த உபத்திரவக்காலம் நிறைவுபெறும்.

## IV. அர்மகெதோன் யுத்தம் :

தானியேல் தீர்க்கதரிசியும், கிறிஸ்துவும் இந்த அர்மகெதோன் யுத்தமானது உலகத்தில் நடைபெறும் காட்சியாக இருக்கும் என முன்னறிவித்திருக்கின்றனர் (தானியேல் 9:26; மத்தேயு 24:6–8). இந்த அர்மகெதோன் யுத்தத்தோடு மகா உபத்திரவக்காலம் நிறைவுபெறும் என வேதம் போதிக்கிறது (சகரியா 12:2, 3; 14:2; வெளி. 16:13–16; 19:17–19).

**அ. அர்மகெதோன் என்றால் என்ன?**

1. இந்த உலகத்திலுள்ள தேசங்கள் ஒன்றுகூடி கள்ளத்தீர்க்கதரிசி, அந்திக்கிறிஸ்து, சாத்தான் இவர்களின் வல்லமையால் இஸ்ரவேல் ஜனங்களை முறியடிக்க கூடிவரும் இடம் (வெளி. 16:13–16).
2. இந்த உலகம் முழுவதையும் உள்ளடக்குகிறது (வெளி. 16:14).
3. இது வல்லமையுள்ள தேவனுடைய நாள் என்று அழைக்கப்படுகிறது.
4. 'யுத்தம்' என்ற வார்த்தையானது ஒரு சிறிய சண்டையைக் குறிப்பதில்லை. ஆனால் இது பெரிய யுத்தத்தைக் குறிக்கிறது.
5. தேசங்களுக்கு விரோதமாக பொங்கி எழும் தேவனுடைய கோபாக்கினையின் நாளாக இது இருக்கிறது.
   i) புறஜாதியார் இஸ்ரவேலை நடத்தின விதத்திற்காக இந்த யுத்தம் அனுமதிக்கப்படுகிறது (யோவேல் 3:2,12; மத்தேயு 25:32).
   ii) புறஜாதியாரின் பாவத்திற்காக இந்த யுத்தம் அனுமதிக்கப்படுகிறது (ஏசாயா 26:21; 34:2, 3, 8).

**ஆ. அர்மகெதோன் எங்கே இருக்கிறது?**

1. அர்மகெதோன் என்ற வார்த்தைக்கு பொருள் மெஜ்ஜிடோ மலை (Mountain of Megiddo) என்பதாகும். இது யோர்தான் நதியின் மேற்கேயும், நாசரேத்தின் தெற்கே 10 மைல் தூரத்திலும், மத்திய தரைக்கடலிலிருந்து சுமார் 15 மைல் தூரத்திலும், ஜெஸ்ரீலின் வடக்கு சமபூமியிலும் அமைந்து உள்ளது.
2. அநேக யுத்தங்கள் இந்த இடத்திலே நடந்திருக்கின்றன.
   i) தெபோராளும், பாராக்கும் கானானியரை இந்த இடத்தில் தோற்கடித்தார்கள் (நியாயாதிபதிகள் 4–5).
   ii) கிதியோன் மீதியானியரை இந்த இடத்தில் தோற்கடித்தார் (நியாயாதிபதிகள் 7).
   iii) சவுல் இந்த இடத்தில் பெலிஸ்தியரால் கொல்லப்பட்டார் (1 சாமுவேல் 31:8).
   iv) அகசியா இந்த இடத்தில் யெகூவினால் கொல்லப்பட்டார் (2 இராஜாக்கள் 9:27).
   v) யோசியா இந்த இடத்தில் எகிப்தியரால் கொல்லப்பட்டார் (2 இராஜாக்கள் 23:29).
   இந்த இடத்தில் பெலிஸ்தரால் கொல்லப்பட்டார் (1 சாமுவேல் 31:8).

**மாணவர் கவனத்திற்கு :**

1. வேகமாக இப்பாடத்தை மாத்திரம் படிப்பதினால் வேத அறிவோ அல்லது ஆவிக்குரிய வளர்ச்சியோ உண்டாகாது.
2. விடைத்தாள்களில் உங்கள் விடைகளை அளிக்குமுன்னதாக பாடத்தையும், கேள்விகளையும் தெளிவாகப் புரிந்து கொண்டீர்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

## வருங்காலம் (மகா உபத்திரவ காலம், கர்த்தருடைய நாள், அர்மகெதோன் யுத்தம்)

*ஒவ்வொரு மாணவரும் பதில் அளித்து அனுப்ப வேண்டிய முகவரி*

*இயக்குனர், ரோக்மா இலவச அஞ்சல் வழிக் கல்வி, தபால் பெட்டி எண் - 9, மதுரை - 625 010.*

**[பூர்த்தி செய்த பின்பு விடைத்தாளை மட்டும் தனிப்பப்டுத்தி தபாலில் அனுப்பவும்]**

### சரியான விடையை வட்டமிட்டு ○ காட்டவும்

1. கிறிஸ்துவின் நாள் என்றால் என்ன?

   a. சபை எடுத்துக்கொள்ளப்படுதலும், கிறிஸ்துவின் நியாயசனமும்

   b. சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் புதிய வானம் புதிய பூமிக்கும் இடைப்பட்ட சம்பவங்கள்

   c. ஆயிர வருட அரசாட்சியின் சம்பவங்கள்

2. கர்த்தருடைய நாள் என்றால் என்ன?

   a. சபை எடுத்துக்கொள்ளப்படுதலும், கிறிஸ்துவின் நியாயசனமும்

   b. சபை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கும் புதிய வானம் புதிய பூமிக்கும் இடைப்பட்ட சம்பவங்கள்

   c. ஆயிர வருட அரசாட்சியின் சம்பவங்கள்

3. கர்த்தரின் நாளுக்கு முன்பு இரண்டு காரியங்கள் நடக்க வேண்டும் அவை யாவை?

   a. சபை எடுத்துக்கொள்ளப்படுதல்

   b. சிலுவை மரணம்

   c. அந்தி கிறிஸ்து வெளிப்பட வேண்டும்

   d. ஆயிர வருட அரசாட்சி முடிவடைய வேண்டும்

4. இன்றைக்கு இருக்கும் உலகத் தலைவர்களை அந்திக்கிறிஸ்து என்று நினைப்பது முட்டாள்தனமாகும், காரணம்?

   a. அந்திக் கிறிஸ்துவாக இருப்பதற்கு ஒரு நபருக்கும் வல்லமை இல்லை

   b. சபை எடுத்துக்கொள்ளும் வரைக்கும் அந்திகிறிஸ்து வெளிப்பட மாட்டான்

   c. அந்திக்கிறிஸ்து யார் என்று தேவன் ஒருவருக்குத்தான் தெரியும்

5. பொருத்துக :– பழைய ஏற்பாட்டில் அந்திகிறிஸ்துவுக்கு கொடுக்கப்பட்டிருக்கும் மூன்று பெயர்கள் என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ------------ | வரப்போகிற பிரபு | a. தானியேல் 7:8 |
| ------------ | தனக்கு இஷ்டமானபடி செய்யும் ராஜா | b. தானியேல் 9:26 |
| ------------ | சின்ன கொம்பு | c. தானியேல் 11:36 |

6. பொருத்துக :– கிறிஸ்துவுக்குள் இருக்கும் நமது ஸ்தானத்தோடு இணைக்கப்பட்டிருப்பது என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ------------ | பாவ மனுஷன் | a. வெளிப்படுத்தல் 13:8–10 |
| ------------ | அக்கிரமக்காரன் | b. 2 தெசலோனிக்கெயர் 2:8 |
| ------------ | மிருகம் | c. 2 தெசலோனிக்கெயர் 2:3 |

7. பொருத்துக :– உபத்திரவக் காலத்திற்கான முக்கிய நோக்கம் என்ன? **(சரியான வசனத்தை வார்த்தைக்கு முன்பு எடுத்து எழுதவும்)**

| | | |
|---|---|---|
| ———————— | இஸ்ரவேலை சுத்தம் செய்து மேசியாவின் வருகைக்கு ஆயத்தமாகுதல் | a. வெளிப்படுத்தல் 16:2 |
| ———————— | கிறிஸ்துவை நிராகரித்த புறஜாதியினரைத் தண்டித்தல் | b. எசேக்கியேல் 20:37,38 |
| ———————— | புறஜாதிகளின் காலம் நிறைவடையும் | c. லூக்கா 21:24 |

8. அந்திக்கிறிஸ்து எப்பொழுது உலகத்தில் வெளிப்பாடுவான்?

a. ஆயிர வருட அரசாட்சியின் ஆரம்பத்தில்

b. தானியேலின் 70–வது வாரத்தின் ஆரம்பத்தில்

c. உபத்திரவ காலத்தின் மத்தில்

9. அந்திக்கிறிஸ்து எப்படி இருப்பான்? **(இரண்டினை வட்டமிடுக)**

a. பெருமைக்காரனாக இருப்பான்

b. தாழ்மையானவனாக இருப்பான்

c. பொய்யனும், ஏமாற்றுகிறவனுமாக இருப்பான்

d. நேர்மையானவனாக இருப்பான்

e. தாராளமானவனாக இருப்பான்

10. அந்திக்கிறிஸ்து தனது வல்லமையை யாருக்கு விரோதமாக பிரயோகிப்பான்?

a. சபை b. யூதர்கள் c. அனைத்து தேசங்கள்

11. அந்திக்கிறிஸ்துவின் முடிவு என்ன?

a. அர்மகெதோன் யுத்தத்தில் கொல்லப்படுவான்

b. ஆயிர வருட அரசாட்சியில் மரிப்பான்

c. அக்கினிக் கடலில் தள்ளப்படுவான்

12. இன்னும் உலகம் அறிந்திராத உபத்திரவக் காலத்தின் மோசமான காரியத்தைச் சொல்லும் வசனத்தைக் குறிக்கவும்?

a. வெளிப்படுத்தல் 19:20

b. எரேமியா 30:7

c. வெளிப்படுத்தல் 13:5

13. உபத்திரவக் காலத்தின் ஆரம்பம் எப்போது?

a. சபை எடுத்துக்கொள்ளப்பட்ட பிற்பாடு

b. கிறிஸ்து வல்லமையோடும் மகிமையோடும் வரும்பொழுது

c. ஆயிர வருட அரசாட்சிக்குப் பிற்பாடு

14. தானியேல்ன் 70–வது வாரத்தின் காலம் எவ்வளவு?

a. ஒரு வாரம்

b. 70 வருடங்கள்

c. ஏழு ஆண்டுகள்

15. உபத்திரவக் காலத்தின் இயல்புகள் மூன்றை வட்டமிடுக?

 a. தேவனின் கோபாக்கினையின் காலமாகும்

 b. உபத்திரவக் காலத்தில் மிகப்பெரிய ஆசீர்வாதமான காலமாக இருக்கும்

 c. இஸ்ரவேல் மற்றும் புறஜாதிய தேசங்களை நியாயத்தீர்க்கும் காலமாகும்

 d. மிகுந்த துன்பத்தின் காலமாகும்

 e. சபையின் பாதுகாப்பின் காலமாகும்

16. 'அர்மெகதான்' என்றால் என்ன?

 a. உலகம் முழுவதும் ஈடுபடும் யுத்தமாகும்

 b. இயேசுகிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையே நடக்கும் யுத்தம்

 c. அந்திக்கிறிஸ்துவுக்கும் இஸ்ரவேலுக்கும் இடையே நடக்கும் யுத்தம்

17. 'அர்மெகதான்' யுத்தம் எப்பொழுது முடியும்?

 a. சாத்தானும் அந்திக்கிறிஸ்துவும் வெற்றி பெறுவார்கள்

 b. கிறிஸ்துவின் சபை வெற்றி பெறும்

 c. கிறிஸ்து வெற்றி பெறுவார்

---

**அவசியமாக உங்கள் பெயரையும் முழு முகவரியையும் தெளிவாக எழுதவும்**

**பதிவு எண் :** ____________________

**முழு பெயர் :** ____________________________________________

**முகவரி :** ____________________________________________

____________________________________________